# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2394/66 - 2024 ජූලි මස 26 වැනි සිකුරාදා - 2024.07.26

*2394/66 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.-பி. 3/ 2021 (III)

**2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்**

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 44 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 71 ஆம் பிரிவின்கீழ், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவுடனும் இலங்கை மத்திய வங்கியுடனுமான கலந்தாலோசனையுடன், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் என்றமுறையில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.

கொழும்பு,
2024, யூலை 26.

1. இவ்வொழுங்குவிதிகள் 2024 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (கரைகடந்த வங்கித் தொழில் - கவனமுள்ள முகாமைத்துவம் மற்றும் நம்பகத்தன்மை) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகள், சட்டத்தின்கீழ் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் அதிலிருந்தும் நிறைவேற்றப்பட்ட ஓர் அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்துக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின்கீழ் நிதிநிறுவனங்களின் பிரத்தியேக ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையாகவுள்ள மத்திய வங்கி, கொழும்புத் துறைமுக நகரக் கிளையின் மேற்பார்வையை நிறைவேற்றுவதற்குப் பொறுப்புடையதாதல் வேண்டுமென்பதுடன் ஆணைக்குழுவுக்கான அறிவித்தலுடன், கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் அதிலிருந்தும்


1A - PG 6792- 364 — (2024/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபடுகின்றமை தொடர்பில், அத்தகைய கொழும்புத் துறைமுக நகரக் கிளைக்குத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், வழிகாட்டுநெறிகள் மற்றும் சுற்றறிக்கைகளை வழங்குவதற்குத் தத்துவமுடையதாதலும் வேண்டும். கொழும்புத் துறைமுக நகரக் கிளையின் ஒழுங்குபடுத்துகையையும் மேற்பார்வையையும் நிறைவேற்றுவதில், மத்திய வங்கியானது வங்கித்தொழில் மேற்பார்வைமீதான பசெல் குழுவினாலும் செயல்முறைக்குகந்த அளவுக்கு அத்தகைய வேறு ஒத்த நியமம் இடும் நிறுவனங்களினாலும் வழங்கப்பட்ட கோட்பாடுகளையும், வழிகாட்டுநெறிகளையும், நியமங்களையும் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்.

4. கொழும்புத் துறைமுக நகரக் கிளையானது, சட்டத்தின் பாகம் ஏஜஜஜ இன்கீழ் அமைச்சரினால் காலத்துக்குக்காலம் வழங்கப்படக்கூடிய அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கும் மத்திய வங்கியினால் காலத்துக்குக்காலம் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், வழிகாட்டுநெறிகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

5. ஒவ்வொரு கொழும்புத் துறைமுக நகரக் கிளையும் பெயர்குறிக்கப்பட்ட நாணயங்களில் மட்டுமே வதிவற்றவர்களுடன் வங்கித்தொழில் வியாபாரத்தைச் செய்தல் வேண்டும். அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் இலங்கையிலுள்ள வதிவுள்ளவர்களுடன் பொறுப்பேற்கப்படும் பட்சத்தில், 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக மத்திய வங்கியிடமிருந்து ஒரு பொதுவான அல்லது குறிப்பிட்ட அதிகாரவளிப்பு பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

6. (1) மத்திய வங்கியின் நிதிசார் உளவறிதற் கூறு, அத்தகைய கரைகடந்த வங்கிகள், பணம் தூய்தாக்கல்மீதான தடை மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளித்தலை எதிர்த்தல் பற்றிய நியதிச்சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்குக் கடப்பாடுடையனவாதலால், ஏதேனும் கொழும்புத் துறைமுக நகரக் கிளைமீதான அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இரண்டாயிரத்தாறாம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம், 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல்மீதான சமவாயச் சட்டம் மற்றும் 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம் என்பவற்றினதும் அவற்றின்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகள், விதிகள் மற்றும் பணிப்புரைகளினதும் ஏற்பாடுகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் கொழும்புத் துறைமுக நகரக் கிளையின் கடமையாதல் வேண்டும்.

7. கொழும்புத் துறைமுக நகரக் கிளையொன்றின் சொந்தநாட்டு ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை இன்னுமோர் அதிகாரசபையின்மூலம் மாற்றப்படும் அல்லது அடுத்துறப்படும் அல்லது சட்டத்தினால் இல்லாதொழிக்கப்படும் பட்சத்தில், விடயத்துக்கேற்ப, அத்தகைய மாற்றம், அடுத்துறுகை அல்லது இல்லாதொழிப்பிலிருந்து 14 பஞ்சாங்க நாட்களினுள் அத்தகைய நிகழ்வை ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் அத்தகைய கொழும்புத் துறைமுக நகரக் கிளையின் கடமையாதல் வேண்டும்.

8. கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபடுகையில் கொழும்புத் துறைமுக நகரக் கிளையினால் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்களும், அறவீடுகளும், மிகைக்கட்டணங்களும், தண்டங்களும் ஆணைக்குழுவினால் அதன் வலைத்தளத்தில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன்கண் குறித்துரைக்கப்படவேண்டிய திகதியிலிருந்து பயனுறுதலும் வேண்டும்.

9. கொழும்புத் துறைமுக நகரக் கிளையின் கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அத்தகைய கிளையில் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதற்கும் குறித்தளிக்கப்படுகின்ற அல்லது அதிகாரமளிக்கப்படுகின்ற அத்தகைய கிளையின் ஊழியரொருவர், தலைமையலுவலகம், கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்புக்கு வெளியே தொழிற்படுகின்ற அத்தகைய வங்கியின் ஏதேனும் கிளை அல்லது தொழிற்பாட்டுக் கூறு தொடர்பாக ஏதேனும் கடமையை அல்லது பணியைப் புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அல்லது ஏதேனும் கொடுக்கல்வாங்கலை நிறைவேற்றுவதற்கு அதிகாரமளிக்கப்படுதலோ அல்லது அனுமதிக்கப்படுதலோ ஆகாது:

ஆயின், எவ்வாறாயினும், உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றின் கிளையொன்றாகவுள்ள கொழும்புத் துறைமுக நகரக் கிளையின் விடயத்தில், அத்தகைய வங்கிக் கிளை விடயத்துக்கேற்ப இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்படும் பட்சத்தில், சட்டத்துக்கும் அதன்கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கியொழுக, அத்தகைய வங்கியின் அத்தகைய கொழும்புத் துறைமுக நகரக் கிளையின் நிருவாகம், முகாமைத்துவம், தொழிற்பாடுகள் மற்றும் ஆபத்து முகாமைத்துவம் என்பனமீது நிறைவேற்று அதிகாரத்தையும் மேற்பார்வையையும் பிரயோகித்தல் அத்தகைய உரிமம்பெற்ற வர்த்தக வங்கியின் பணிப்பாளர் சபைக்கு அல்லது முகாமைக் குழுவுக்கு அல்லது தலைமையலுவலகத்தினால் நியமிக்கப்பட்ட அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்ட பிரதான நிறைவேற்று அலுவலருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :

ஆயின், மேலும், கொழும்புத் துறைமுக நகரக் கிளையின்மீது நிறைவேற்று அதிகாரத்தை அல்லது மேற்பார்வையைப் பிரயோகிக்கின்ற எவரேனும் பணிப்பாளர், முகாமைக் குழுவொன்றின் உறுப்பினர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், அத்தகைய கொழும்புத் துறைமுக நகரக் கிளையிலிருந்து, ஒன்றில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ, ஏதேனும் ஊதியத்தை அல்லது தொழிலுடன் தொடர்புபட்ட நன்மையைப் பெறுதலாகாது.

10. கொழும்புத் துறைமுக நகரக் கிளைக்குத் தடைவிதிக்கப்படும், குற்றப்பணம் விதிக்கப்படும் அல்லது எச்சரிக்கை விடுக்கப்படும் அல்லது சொந்தநாட்டு ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடுகளுக்கு அது இணங்கியொழுகவில்லையெனக் காணப்படும் அல்லது கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் அதிலிருந்தும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அத்தகைய கொழும்புத் துறைமுக நகரக் கிளைக்கு வழங்கப்பட்ட அனுமதி அத்தகைய சொந்தநாட்டு ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையினால் இடைநிறுத்தப்படும், ஒப்படைக்கப்படும், இரத்துச்செய்யப்படும் அல்லது இல்லாதொழிக்கப்படும் பட்சத்தில், அத்தகைய ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையிலிருந்து பதினான்கு பஞ்சாங்க நாட்களினுள் அதுபற்றி ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் அத்தகைய கொழும்புத் துறைமுக நகரக் கிளையின் கடமையாதல் வேண்டும். ஆணைக்குழுவானது, விடயத்துக்கேற்ப, மத்திய வங்கியுடன் அல்லது இலங்கையின் நிதிசார் உளவறிதற் கூறுடன் அத்தகைய தகவலைப் பகிர்தல் வேண்டும்.

11. இவ்வொழுங்குவிதிகளில்-

"சட்டம்" என்பது, 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் எனப் பொருள்படும்;

"கிளை" என்பது, வியாபாரமொன்று அங்கு நடாத்தப்படுகின்ற கம்பெனியொன்றின் பிரதான அலுவலகம் அல்லது தலைமையலுவலகம் தவிர்ந்த ஓர் அமைவிடம் எனப் பொருள்படும்;

"மத்திய வங்கி" என்பது, 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி எனப் பொருள்படும்;

"கொழும்புத் துறைமுக நகரக் கிளை" என்பது, சட்டத்தின் 42 ஆம் பிரிவின் நியதிகளின்படி கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பில் அல்லது அதிலிருந்து கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு உரிமம்பெற்ற ஒரு கம்பெனியின் கிளையொன்று எனப் பொருள்படும்;

"ஆணைக்குழு" என்பது, சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு எனப் பொருள்படும்;

"பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் மத்திய வங்கியினால் "பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்" எனத் தீர்மானிக்கப்பட்டவொரு வெளிநாட்டு நாணயம் எனப் பொருள்படும்;

"நிதி நிறுவனங்கள்" என்பது, 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தில் தரப்பட்டுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"இலங்கையின் நிதிசார் உளவறிதற் கூறு" என்பது, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தில் தரப்பட்டுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"சொந்தநாட்டு ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை" என்பது, முறையான வங்கியின் கொழும்புத் துறைமுக நகரக் கிளையின் தாய் உருவகம் எந்த நாட்டில் தாபிக்கப்பட்டுள்ளதோ அந்த நாட்டின் வங்கித்தொழிற்றுறை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை எனப் பொருள்படும்;

"கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம்" என்பது, சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"தாய் உருவகம்" என்பது, சட்டத்தின்கீழ் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு உரிமமொன்று வழங்கப்படுவதற்காகக் கொழும்புத் துறைமுக நகரக் கிளையைத் தகவுடையதாக்குகின்ற வங்கித்தொழில் உரிமத்தை வைத்திருக்கின்ற உருவகம் எனப் பொருள்படும்; அத்துடன்

"வதிவுள்ளவர்" மற்றும் "வதிவற்றவர்" என்பன, சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

EOG 07-0270

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.